**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 70/2022**

**Deposition of P.W.** 9

Name : திரு. வினிஷ் பாபு

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**18.02.2026**

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் தற்போது கன்னியாகுமரி காவல்நிலையத்தில் உதவிஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். 24.10.2021ம் தேதி குலசேகரம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது 23.10.2021ம் தேதி குலசேகரம்அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அப்போது பொறுப்பு அலுவலில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ராஜேந்திரன் என்பவர் குலசேகரம் மருத்துவமனை சென்று அஸ்பின் என்வரிடம் புகார்மனுவை பெற்று அதற்கு புகார்மனு ரசீது எண்.471/2021 வழங்கி இருந்தார். அந்தபுகார் மனு ரசீதை பார்வையிட்டு அதன் தன்மை படி 24.10.2021ம் தேதி இரவு 19.00 மணிக்கு நிலைய குற்ற எண்.409/2021 பிரிவுகள் 294(பி), 323, 506(2) இ.த.ச படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல்அறிக்கை

அ.சா.ஆ.3, அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றயை தினமே இரவு 20.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் தாசன், ராஜப்பன் ஆகியவர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4, சம்பவ இடத்தில் காணப்பட்ட காற்றாடி கம்பு ஒன்றை அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.5. கைப்பற்றபட்ட வழக்கு சொத்தை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 அ.சா.ஆ.6. பின்னர் வழக்கின் புகார்தாரர் அஸ்பின் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சையில் இருந்ததால் அவரை விசாரிக்க இயலவில்லை. சம்பவத்தை கண்ணால் கண்ட சாட்சிகளான அமல்ராஜ்,செல்லன், கலா மற்றும் சம்மபவத்தை கேள்வி பட்ட சாட்சிகள் ஆல்பின் ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 29.10.2021ம் தேதி புகார்தாரர் அஸ்பின் மற்றும் சாட்சி சார்லெட் ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையிலிருந்து எதிரி புகார்தாரருக்கு மரணம் ஏற்படுத்த வேண்டும் என்று அவரை தாக்கியதால் இவ்வழக்கில் பிரிவு 307 இ.த.ச படி சட்ட மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த சட்ட மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7. எனவே வழக்கு கோப்பை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

29.10.2021ம் தேதிதான் சட்ட மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். 22.10.2021ம் தேதி சம்பவம் நடந்ததாக காயம்பட்ட நபர் கொடுத்த

புகாரிலிருந்து தெரிய வந்தது. புகார் மனுவிற்கு முதலில் ரசீது கொடுக்கப்பட்டது. புகார் மனு கொடுக்கும் போது அ.சா.1 சுயநினைவுடன் இருந்ததாக கோப்புகளை பரிசீலித்தால் தெரிய வரும். அ.சா.1 புகாரில் எதிரி தன்னை தலையில் தாக்க வந்ததாகவோ, அந்த அடி வயற்றில் பட்டதாகவோ கொலை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் தாக்கியதாகவோ குறிப்பிடவில்லை. சம்பவம் 22.10.2021ம் தேதி நடந்துள்ளது. வழக்கு 24.10.2021ம் தேதி பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அத்தாட்சி படி 2 காற்றாடி கம்புகள் கைப்பற்றப்பட்டதாக உள்ளது என்றால் ஒரே கற்றாடி கம்பு இரண்டாக உடைந்திருந்தது. அத்தாட்சியில் ஒரே கம்பு இரண்டாக உடைந்ததாக குறிப்பிடவில்லை. இரண்டு கம்புகள் கைப்பற்றியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் இரண்டு துண்டுகள் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன். படிவம் 91ல் சுமார் 60 செ.மீ நீளமும் 15 செ.மீ சுற்றவும் கொண்ட கற்றாடி கம்பு ஒன்று என்ற இடத்தில் சிறிதாக இருபக்கமும் உடைந்த நிலையில் உள்ள என்று சேர்த்து எழுதியுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் இரண்டாவதாக சுமார் 43 செ.மீ நீளமும். 14 செ.மீ சுற்றளவும் கொண்ட கற்றாடி கம்பு ஒன்று என்று குறிப்பிட்டு அதன்அருகேசிறிதாக இரண்டு பக்கமும் உடைந்த நிலையில் உள்ள என்று திருத்தம் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி திருத்தங்களுக்கு அருகே மேலோப்பம் எதுவும் செய்யவில்லை. படிவம் 91ல் இரண்டு துண்டுகள் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 02.11.2021ம் தேதி நீதிமன்ற காவலுக்கு அனுப்பினோம் என்றால் சரிதான். காலம் தாழ்த்தி அனுப்பப்பட்டதற்கு காரணம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. கண்ணால் கண்ட சாட்சிகள் யாரும் காற்றாடி கம்பு

இரண்டு துண்டுகளாக உடைந்ததாக என்னிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பொதுரோட்டின் ஓரமாக கம்பு கைப்பற்றப்பட்டதாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ரோட்டில் அதிக வாகன போக்குவரத்து இருக்கும் என்றால் சரிதான். நான் சொன்னது போல் கம்பு எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. கம்பு கொண்டு முகத்தில் தாக்கியதாகவோ, வேறு இடங்களில் காயம் இருந்ததாகவோ காயம்பட்ட நபர் என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் வழக்கில் காயம்பட்ட நபருக்கு காயங்கள் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தின் தெற்கே பஞ்சாயத்து கிணறு உள்ளது. சம்பவ இடத்திலிருந்து வெகு தொலைவில் வில்சன், தாசன், செல்வராஜ் ஆகியவர்கள் வீடுகள் உள்ளது என்றால் 50 மீட்டர் தொலைவிற்குள் உள்ளது. சம்பவ இடத்தின் அருகே கண்ணால் கண்ட சாட்சிகளின் வீடுகள் இல்லை என்றால் சரியல்ல. சுமார் 100 மீட்டர் தொலைவில் சிறிய பள்ளத்தில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். தயார் செய்த ஆவணங்களின் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.